தினமணி

## வருவாய், நீ வருவாய்!

கு. குமாரவேலு

First Published : 27 Feb 2012 01:23:58 AM IST

சற்றேறக்குறைய 2,500 ஆண்டுகளுக்கு முன்பு, செந்தமிழ்நாட்டில் பொன்னியென்ற கன்னி, கடல் புகுந்த வெண்சங்கும், வெண்நுரையும் பின்னிப்பிணைந்து தழுவித் தவழ்ந்திருந்த பேரழகு பூம்புகார் நகர் கடற்கரையில் ஐந்தும், ஆறுமாக, நிறம் வேறுபட்டு, திறம் ஏறுபட்ட கிரேக்கர்களும், உரோமர்களும் உலாவிக் கொண்டிருந்தனர். காலாற, இளைப்பாற அல்ல. கப்பலேறவுள்ள பண்டங்களைப் பாதுகாக்க பூம்புகாரின் அகம் காக்கவும், அரண் காக்கவும் அவர்களைக் காவலர்களாகக் கொண்டிருந்த அத்தமிழர்களின் செல்வச் செழிப்பு, நம்மை வியப்பில் ஆழ்த்தட்டும்.

ஆங்கிலேயர்கள், மரவுரி தரித்து, செல்டிரிஸ் என்ற பழங்குடியினராக மேற்கே பவனி வந்த அந்தக் காலத்திலேயே, நாகரிகத்திலும், செல்வச் செழிப்பிலும், கொடி கட்டிப் பறந்தவர்கள் இந்தக் கிரேக்க உரோமர்கள் என்ற உண்மை, நம்மைப் பெருமிதப்படுத்தட்டும்.

"திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற நிலைப்பாட்டில் நித்தமிருந்த தமிழர்கள், கிழக்கிலும், மேற்கிலும் அலைகடல் கடந்து வருவாய் ஈட்டினர்.

தென்மேற்குப் பருவக்காற்றைப் பயன்படுத்தி, பாய்மரக் கப்பல் மட்டுமேயிருந்த அப்போது, அம்மாதங்களில், கிரேக்க உரோமர்கள் தமிழ்நாட்டுக்கும், தமிழர்கள் கீழைநாடுகளுக்கும் கடல் தவழ்ந்தனர். வடகிழக்குப் பருவக் காற்றில், தத்தம் நாடுகளுக்குத் திரும்பினர்.

மேற்குக் கடற்கரையில், சேரநாட்டின் பட்டினம் என்று இப்போதும், முசிறி என்று அன்றும் அழைக்கப்பட்ட துறைமுக நகரம், இப்போது அகழ்வாராய்ச்சியால் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. அத்துறைமுகம், மேற்கையருக்கு நுழைவாயிலாக இருந்தது.

அங்கிருந்து, பாலக்காட்டுக் கணவாய் வழியாக, கொங்குநாடு புகுந்து பேரூர் என்ற நொய்யல் கரையிலிருந்த பெரிய ஊரில் தங்கினர். அங்கிருந்து சேரநாட்டுத் தலைநகர் வஞ்சி என்ற கருவூர் வழியாக, சோழப் பேரரசர்கள் உறைவிடமான காவிரிக்கரை உறையூர் புகுந்து, பூம்புகார் என்ற சோழர் துறைமுகமாகிய காவிரிப்பூம்பட்டினம் குவிந்தனர்.

உரோம, கிரேக்க, மகதம் போன்ற நாடுகளில் வெளியிடப்பட்ட காசுகளும், சங்ககால சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வெளியிட்ட காசுகளும் கரூரிலும், பேரூரிலும், கொங்குநாட்டுக் கொடுமணலிலும் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தெற்குப் பெருவழி(தட்சிணப் பதம்), கொங்குப் பெருவழி போன்ற வணிகப் பெருவழிகள் கரூர் வழியாகச் சென்றன.

தாமிரபரணி நதி கடல் கலந்த இடத்திலிருந்த மாபெரும் அன்றைய துறைமுகம் கொற்கை என்ற தற்போதைய ஆதிச்சநல்லூரில், சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே, பன்னாட்டு மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் அகழ்வாய்வில் தெரியவந்துள்ளது.

பெரும்பொருள் வாணிகம் தமிழர்கள் நிகழ்த்தியதால், வருவாய் வந்தது. வெறுவாய் அரங்கங்களில் வருவாய் பிறக்காது. வளமான வருவாயை ஈன்றது, நலமான அன்றைய தமிழ்மண் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அம் மாமண்ணில் விளைந்த பொருள்கள்தான் சங்கத் தமிழர்களின் ஏற்றுமதிப் பொருள்களாக இருந்தன.

ஒரு நாட்டின் பொருளாதாரம், அடித்தளம், இடைத்தளம், மேல்தளம் என்ற மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும். அதில் அடித்தளமாக விளங்குவது நிலமும், நிலம் சார்ந்த விளைபொருள்களும். நிலத்தின் உள், விளை, வளர்பொருள்களை நுகர்பொருள்களாக உருமாற்றி வழங்கிடும் தொழிற்சாலைகளும், ஆலைகளும் நாட்டின் பொருளாதாரத்தின் இடைத்தளம் அல்லது நடுத்தளமாகக் கருதப்படுகிறது.

உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள், நாகரிக சுகம் வழங்கும் நவீன கேளிக்கை மையங்கள், சிறு, குறு கடைகள், பெரிய வர்த்தக வியாபார மையங்கள், தங்கும், உண்ணும் விடுதிகள் போன்ற தேவை, சேவை மையங்கள் மேல்தளமாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதாரம் சிறப்பானதாக மட்டுமன்றி, உறுதியானதாகவும், எவ்வித பாதக நிலையிலும் நிலைகுலையாமல் சாதகமாக இருக்க வேண்டுமென்றால், இன்றியமையாத அடித்தளம், நிலையான உறுதித்தன்மையோடு, வலிமையான ஆதாரமாகத் திகழ வேண்டும். பலமான அடித்தளம், நிலையான தேவை, சேவைகளை வழங்கிடும் மேல்தளங்களை, மக்களது வளம், நலம் காத்திடும் சீரிய பணியைச் செவ்வனே நிறைவேற்ற ஏதுவாகும்.

இந்தியாவின் பொருளாதாரத்தில் விவசாய வளர்ச்சி விகிதம் (அடித்தளம்) நிர்ணயிக்கப்பட்ட 4% வளர்ச்சி கூட அடையாமல், 2% மட்டும் எட்டிப்பிடித்துத் தொங்கிக் கொண்டுள்ளதும், தமிழகத்தில் 2010-11-ல் அதனினும் குறைவாக, குட்டிக் கரணமிட்டுக்கொண்டு இருப்பதையும், அள்ளித் தரப்படும் பொருளாதாரப் புள்ளிவிவரங்கள், தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

தமிழகத்தில் இரண்டாவது தளம் (தொழிற்சாலை) 6.8% ஆகவும், மேல்தளம் (வியாபாரம்) 14.5% ஆகவும் உள்ளது, நமக்கு, ஒரு கூம்புமுனை கீழ்த்தளத்தில் திருப்பி வைத்திருக்கும் காட்சியை மனக்கண்முன் நிறுத்தட்டும்.

இக்கூம்பு வடிவத்தை ஒரு குப்பி (டம்ளர்) பரிமாணமாக மாற்ற ஏற்ற, மாற்றுத் திட்டங்களும் செயலாக்கங்களும் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

குறையைக் குறைத்து, நிறையை நிறையவே செய்ய, பிரச்னைகளைத் தெளிவாகத் தெரிந்து, புரிந்து, அறிய வேண்டும். 2010-11-ல் தமிழகத்தில் விவசாயம் மற்றும் நிலம் சார்ந்த பொருள்கள் உற்பத்தி 30,753 கோடி ரூபாய் மதிப்பையும், தொழிற்சாலைகள் 1,03,721 கோடி ரூபாய் மதிப்பும், வர்த்தகம், வாணிபம் 2,53,169 கோடி ரூபாய் மதிப்பையும் ஈட்டியுள்ளன.

தமிழ்நாட்டின், 2007-08 முதல் 2010-11 வரையான 4 ஆண்டுகளின் சராசரி வளர்ச்சி விகிதமாக, விவசாயம் ஒரு சதவிகிதத்துக்குக் குறைவாகவும், தொழிற்சாலைகள் 4.43% ஆகவும், வணிக சேவைகள் 11.02% ஆகவும் உள்ளதைப் பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அடித்தளம் ஆடுவதற்குக் காரணம், பொய்த்துவரும், மாறிவரும் பருவமழை, அதனால் வளமிழந்த, நலமிழந்த மண், இடுபொருள் விலையேற்றம், விளைபொருள் விலைச்சரிவு, உடன் தரமிழக்கும் விளைபொருள்கள், இடைத்தரகர் இடையூறு போன்ற இடையூறுகள்.

ஏமாற்றத்தை ஏமாற்றிட, ஏற்புடைய, எளிதில் நடைமுறைப்படுத்தவல்ல, கிராமப்புற வளர்ச்சியை ஏற்றிடும் மாற்றுத் திட்டங்களைத் தீட்டிட வேண்டும். இதற்கான தொழில்நுட்பங்கள், ஏற்புடைய விவசாயிகள் உள்ள தமிழகத்தில் நிச்சயமாக நிறைவேற்றிட முடியும்.

தமிழகத்தில், விவசாய பூமியின் வருமானத்தில், 40% உண்ணும், உடுக்கும் தாவரங்கள் மூலமும், 24% தோட்டக்கலை விளைபொருள்கள் மூலமும், 36% கால்நடைச் செல்வங்கள் மூலமும், 2009-10-ம் ஆண்டில் வருவாயில் கிடைத்திருப்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

தமிழகம் நீர் ஆதாரம் குறைவாக உள்ள நிலப்பரப்பு என்பதும், வரும் ஆண்டுகளில் மேலும் நீர்த்தேவை அதிகரித்து, இருப்புக் குறைந்திடும் என்பதையும் நினைவில் நிறுத்தி மேலே குறிப்பிடப்பட்ட, புள்ளிவிவரங்களை மறுமுறை பார்க்கலாம்.

குறைந்த நீர்த்தேவையே உள்ள கால்நடை, நீர்த்தேவை அதிகமாக உள்ள விவசாய விளைபொருள்களுக்கு நிகராக, வருமானம் ஈட்டியுள்ளபோதிலும், நடந்து வரும் 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், விவசாயத்துக்கு ஒதுக்கியதில் 13% நிதி மட்டுமே கால்நடைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதையும், வருங்கால வருவாய் மேம்பாட்டுக்கு நினைவுகொள்ள வேண்டும்.

அதுபோன்றே, நீர் குறைவாகவே தேவைப்படும் பருப்பு வகைகள், மொத்த விவசாய மதிப்பான 11 ஆயிரம் கோடியில், 340 கோடி ரூபாய் மட்டுமே ஈட்டியுள்ளது. இது 1.2% ஆகும்.

தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்வகைகள் 17 சதவிகிதமும், கரும்பு 7.6 சதவிகிதமும் வருமானம் ஈட்டியுள்ளன. எனவே புரதச்சத்து தாவரங்களைக் குறைவாக வளர்த்து வரும் தமிழகத்தில், ஒவ்வொரு சொட்டு நீரையும், சரிவரப் பயன்படுத்தி, அதிக அளவில் புரதப் பயிர்களை உற்பத்தி செய்தால் வருமானம் அதிகரிக்கும். சுமார் 20 லட்சம் டன் அளவு பருப்பு வகைகளை உணவாகப் பயன்படுத்தும் தமிழகத்தில், 2 லட்சம் டன்னுக்குக் குறைவாகவே

இப்போது ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்பட்டு வருவதையும் நினைவில்கொள்ள வேண்டும்.

பருவமழைத் தாக்கங்களைத் தாங்கி, அதிக வருவாய் வழங்கிடும் வீரிய மர வகைகளை, வரப்போரம் நடுவதன் மூலமே, வருமானத்தை உயர்த்தி, வரப்போகும் துயர் தவிர்க்கலாம்.

உணவுப் பொருள் விளை வருமானத்தைப் பாதிக்காமல், கூடுதலாக ஏக்கருக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.10,000 முதல் ரூ.20,000 வரை அதிக வருவாய் ஈட்ட முடியும்.

தமிழ்நாட்டில் உள்ள மொத்த விளைநிலப் பரப்பான 145 லட்சம் ஏக்கரில், சுமார் 40 லட்சம் ஏக்கர் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

வளம் கொண்டும் குறையாக விடப்பட்டுள்ள இந்நிலங்களிலும், விளைநில வரப்புகளிலும், உணவு உற்பத்தியைப் பாதிக்காத வகையில், ஆண்டுக்கு 10 கோடி மரங்கள் வீதம், அடுத்து 5 ஆண்டுகளில் 50 கோடி மரங்கள் நட்டால், ஆண்டொன்றுக்குத் தொடர்ந்து, குறைந்தது 10,000 கோடி ரூபாய் கூடுதலாக தமிழகப் பொருளாதார அடித்தளத்துக்குக் கிடைத்திடும்.

தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாக இப்போது 80% ரசாயனம் மற்றும் உலோகங்கள் பயன்படுகின்றன.

காசு கிடைத்தாலும் இவற்றின் கழிவுகளால் மாசு அதிகரித்துக்கொண்டே உள்ளன. 40% தொழிற்சாலைகள், நிலம் சார்ந்த விளைபொருள்களை மட்டுமே மூலப்பொருளாகப் பயன்படுத்துமாறு தொழில் கொள்கை தமிழக அரசு உருவாக்கிட வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதுபோன்ற தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, அங்கு உற்பத்தி செய்யப்படும் மூலப்பொருள்களை மட்டுமே பயன்படுத்தினால் அந்த 50 கோடி மரங்களின் மூலம் கிடைத்திடும் ரூ.10,000 கோடி கூடுதலாக மேலும் ரூ.20,000 கோடி வருவாய் ஈட்டி, கிராமப்புறப் பொருளாதாரத்தையும், வேலைவாய்ப்பையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திடும் உன்னதப் புனிதச் செயலைச் செய்திட இயலும்.

தமிழகத்தில் ஒரு மனிதனின் சராசரி ஆண்டு வருமானமாக 2010-ம் ஆண்டில் இருந்த ரூ.46,123-ஐ, கணிசமாக உயர்த்திட இது வழிவகை செய்யும்.

பொருளாதார ரீதியில் லாபம் தருவதாகவும், சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்த வல்லதாகவும், உலகம் வெப்பமாவதைக் குறைத்திட ஏற்றதாகவும், மண் வளமேற்றி, உயிர் உர, உயர்தர பயிர் விவசாய உத்திகள் மூலம் நிச்சயமாக நிறைவேற்றிடலாம். இவ்வாறெல்லாம், தமிழகத்துக்கு வருவாய், நீ வருவாய்.

## கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் அதிகரிக்கப்படுமா?

கே.கே.மணிகண்டன்

First Published : 27 Feb 2012 04:47:01 AM IST

கோவை, பிப். 26: தமிழகம் முழுவதும் உள்ள 3 கோடிக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க குக்கிராமங்களில் போதுமான கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் இல்லை. இந்த நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கால்நடைகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்படுவது வழக்கம். 2007-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, கறவை மாடுகள் எண்ணிக்கை 1.12 கோடி, எருமைகள் - 20.09 லட்சம், செம்மறியாடுகள் - 79.91 லட்சம், வெள்ளாடுகள் - 92.75 லட்சம், குதிரைகள் - 6 ஆயிரம், கழுதைகள் - 5 ஆயிரம், பன்றிகள் - 2.84 லட்சம் என மொத்தம் 3.07 கோடி கால்நடைகள் உள்ளன.

இது தவிர, பண்ணை மற்றும் நாட்டுக் கோழிகளின் எண்ணிக்கை 12.81 கோடி என கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

மேலும் அதிகரிக்கும்:÷இந்த நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்த இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தில் ஆண்டுக்கு 12 ஆயிரம் கறவை மாடுகள் வீதம் 5 ஆண்டுகளுக்கு 60 ஆயிரம் மாடுகள் வழங்கப்படவுள்ளன. நடப்பாண்டில் 12 ஆயிரம் மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோல, ஆண்டுக்கு 1.20 லட்சம் குடும்பங்களுக்கு தலா 4 ஆடுகள் வீதம், 5 ஆண்டுகளில் 6 லட்சம் குடும்பங்களுக்கு மொத்தம் 24 லட்சம் ஆடுகள் வழங்கப்படும். நடப்பாண்டில் 4.80 லட்சம் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் காரணமாக, தமிழகத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கால்நடை பராமரிப்பு மற்றும் சிகிச்சைக்கு மாநிலத்தில் 6 பல்நோக்கு கால்நடை மருத்துவமனைகள், 22 கால்நடை பெரு மருத்துவமனைகள், 139 கால்நடை மருத்துவமனைகள், 1,651 கால்நடை மருந்தகங்கள், 55 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 1,485 கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் உள்ளன.

கடந்த ஆண்டுகளில், குக்கிராமங்களில் உள்ள 1,485 கால்நடை கிளை நிலையங்களில், 585 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

தரம் உயர்த்தப்பட்ட கிளை நிலையங்களுக்கும், கால்நடை மருந்தகங்களில் காலியாக உள்ள 288 பணியிடங்களுக்கும் என மொத்தம் 873 கால்நடை உதவி மருத்துவர்களைப் பணியில் அமர்த்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது, ஆண்டுக்கு 350 கால்நடை ஆய்வாளர்கள் வீதம் 3 ஆண்டுகளுக்கு 1050 ஆய்வாளர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

அதிகரிக்கப்படுமா?... குக்கிராமங்களில் 8 கி.மீ. தூரத்துக்கு ஒரு கால்நடை மருத்துவக் கிளை நிலையம் இருக்க வேண்டும் என்பது அரசு விதிமுறை. ஆனால், ஆயிரக்கணக்கான குக்கிராமங்களில் கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் அமைக்கப்படவில்லை.

மேலும், கால்நடை கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்படும்போது, அருகில் மருத்துவ வசதி கிடைக்காத குக்கிராமங்களில் புதிதாக கால்நடை கிளை நிலையங்கள் தொடங்க வேண்டும் என்ற அரசாணையும் பல இடங்களில் செயல்படுத்தப்படவில்லை.

தாராபுரம்-குண்டடத்துக்கு இடைய 19 கி.மீ. தூரம் உள்ளது. இடைப்பட்ட கிரமாங்களைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க பல கி.மீ. தூரம் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதேபோல, பல குக்கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், அருகில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் இல்லாமல் சிரமப்படுகின்றனர்.

குறைந்தபட்சம், 2,236 கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் இருக்க வேண்டியது அவசியம். இதுகுறித்து பொங்கலூர் வட்டார விவசாயிகள் சங்கத் துணைத் தலைவர் கே.ராமசாமி கூறியது: கால்நடை வளர்ப்பை அதிகரிக்க வேண்டியது அவசியம் என மாநில திட்டக் குழு அறிவுறுத்தியுள்ளது. இந்நிலையில், குக்கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் சிரமங்களைத் தவிர்க்க 5 கி.மீ. தூரத்துக்கு ஒரு கால்நடை மருத்துவக் கிளை நிலையம் அமைக்க வேண்டும். திருப்பூர்-வேளம்பட்டிக்கு இடையே 20 கி.மீ. தூரம் உள்ளது. இதற்கு இடையே உள்ள குக்கிராமங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர், 10 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

கால்நடை கிளை நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் கறவை மாடுகளைப் பராமரிக்கவும், கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் வாய்ப்பு கிடைக்கும். இதனால், மக்கள்தொகைக்கு ஏற்ப பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்றார்.

## புதிய நெல் ரகம் அண்ணா (ஆர்) 4 அறிமுகம்

First Published : 26 Feb 2012 01:34:16 AM IST



மதுரை வேளாண் கல்லூரியில் நடைபெற்ற அண்ணா (ஆர்) 4 நெல் ரக அறிமுக விழாவில் நெற்கதிரை பார்வையிடும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேசபூப மேலூர், பிப். 25: வறட்சிப் பகுதிகளில் அதிக மகசூல் தரும் புதிய நெல் ரகம் அண்ணா (ஆர்) 4-ஐ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களின் வறட்சிப் பகுதிகளில் சாகுபடிக்கு ஏற்ற புதிய நெல் ரகமான அண்ணா (ஆர்) 4 பயிரிடப்பட்ட நெல் வயலில், அறுவடைக்கான வயல் விழா, மதுரை வேளாண் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்றது.
இதில் கலந்துகொண்ட தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜு பேசியதாவது:
விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற முனைப்புடன் பல்வேறு திட்டங்களைத் தொடங்கிவைத்து வருகிறார் தமிழக முதல்வர்.
இந்த ஆண்டு விவசாயத்துக்கு ரூ.2800 கோடி அளவுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வட்டி இல்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கான வட்டித் தொகையை அரசே செலுத்துகிறது.
தமிழகம் முழுவதும் உள்ள 1.85 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் விலையில்லாத அரிசி தலா 20 கிலோ வழங்கப்படுகிறது.
இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தின் நெல் உற்பத்தி இலக்கை 115 லட்சம் டன் என நிர்ணயம் செய்துள்ளார் முதல்வர்.
இந்த இலக்கை அடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகளும் பாடுபட்டு வருகின்றனர்.
மும்பையைச் சேர்ந்த டாடா அறக்கட்டளை உதவியுடன் அண்ணா (ஆர்) 4 நெல் ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
வானம் பார்த்த பூமியாக உள்ள பகுதிகளில் இந்த நெல் ரகம் அதிக மகசூல் தரக்கூடியது. மதுரை அருகே செக்கானூரணியில் வைகைப் பாசனத்தில் இந்த ரக நெல் ஒரு ஹெக்டேருக்கு 9,450 கிலோ விளைந்
துள்ளது என்றார் அவர்.
வயல் விழாவைத் தொடங்கி வைத்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேசபூபதி பேசியது:
11 வேளாண்மைக் கல்லூரிகளிலும், 36 ஆராய்ச்சி நிலையங்களிலும் கலப்பின ஆராய்ச்சி மூலமாக 263 புதிய பயிர் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
15 வகையான பண்ணைக் கருவிகள் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தில் எளிதாகக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

**சொட்டு நீர்ப் பாசனத்துக்கு 100 சத மானியம்: விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**
First Published : 26 Feb 2012 12:32:44 PM IST

கரூர், பிப். 25: 100 சத அரசு மானியத்தில் சொட்டு நீர்க் குழாய் அமைக்க தோகைமலை பகுதி விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என தோட்டக்கலை உதவி இயக்குநர் சிந்தாமணி தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:
தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டத்தின் கீழ், கரூர் மாவட்டம், தோகைமலை ஒன்றிய பகுதியில் உள்ள குறு, சிறு விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைத்திட ரூ. 43,816 மானியமாக வழங்கப்படுகிறது.
அரசு மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள், நிலத்துக்கான சிட்டா, அடங்கல், வரைபடம், குடும்ப அட்டை நகல், 2 புகைப்படம், வருவாய்த் துறையின் மூலம் பெறப்பட்ட குறு, சிறு விவசாயிக்கான சான்று ஆகிய ஆவணங்களுடன் தோகைமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.
இதுகுறித்து விவரங்களை அறிந்து கொள்ள தோகைமலை பகுதியைச் சேர்ந்தவர்கள் 8098082332 என்ற செல்போன் எண்ணிலும், கள்ளை பகுதியைச் சேர்ந்தவர்கள் 9791240110 என்ற எண்ணிலும், ஆலத்தூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் 7373269191 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி பயிற்சி**
First Published : 26 Feb 2012 03:40:28 PM IST

வந்தவாசி, பிப். 25: திண்டிவனம் எண்ணெய் வித்துகள் ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கான நீடித்த நவீன கரும்பு சாகுபடி பயிற்சி முகாம் வந்தவாசியை அடுத்த அமுடூர் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
திண்டிவனம் எண்ணெய் வித்துகள் ஆராய்ச்சி நிலைய தலைவர் டாக்டர் ராமமூர்த்தி தலைமை வகித்தார். முன்னோடி விவசாயி பாலமுருகன் வரவேற்றார். நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறை குறித்து திட்ட விஞ்ஞானி டாக்டர் சீனி.அன்புமணி விளக்கினார். சொட்டுநீர் பாசனத்தின் அவசியம் குறித்து உழவியல் நிபுணர் தவராஜன் பேசினார். செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு அலுவலர் வனிதா, ஆலை விவசாயிகள் சங்கத் தலைவர் டி.வேலு, அமுடூர் ஏரிப்பாசனச் சங்கத் தலைவர் எஸ்.குப்புசாமி மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 71.87 அடி

First Published : 26 Feb 2012 10:23:52 AM IST

ஈரோடு, பிப்.25: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை 71.87 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 252 கன அடி வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 600 கன அடியும், வாய்க்காலில் 2,300 கன அடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 11.75 டி.எம்.சி.

## அனைத்து விவசாயிகளுக்கும் கொப்பரை கொள்முதல் அட்டை வழங்க வலியுறுத்தல்

First Published : 26 Feb 2012 10:14:04 AM IST

ஈரோடு, பிப். 25: கொப்பரை கொள்முதல் அட்டையை தென்னை விவசாயிகள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் ஈரோட்டில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கச் செயலர் செ.கோபிநாத் தலைமை வகித்தார்.

கொப்பரைத் தேங்காய் விலை ரூ.74-ல் இருந்து ரூ.40 ஆக சரிந்துள்ளது. அரசு தென்னை விவசாயத்தை பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை குறைக்கவும் தேங்காய் பருப்பு கொள்முதல் விலையை ரூ.51 ஆக அறிவித்துள்ளது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டம் அவல்பூந்துறையில் உள்ள கொப்பரை கொள்முதல் மையத்தில் வியாழக்கிழமை முதல் கொப்பரை கொள்முதலை மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தொடங்கி வைத்திருக்கிறார்.

தென்னை விவசாயிகளுக்கு இந்த அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கவில்லை. மாறாக இடைத்தரகர்கள், வியாபாரிகள், எண்ணெய் ஆலை அதிபர்கள் தான் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மத்திய அரசின் தேசிய வேளாண் கூட்டமைப்புக்காக (நேப்பட்), தமிழக அரசின் டேன்பெட் இந்த கொள்முதலை முன்னின்று நடத்துகிறது.

எவ்வித முறைகேடுக்கும் இடம் அளிக்காமல் விவசாயிகள் பயனடையும் வகையில் கொப்பரையை கொள்முதல் செய்ய வேண்டும்.

இதுவரை 20 சதவீத தென்னை விவசாயிகளுக்கு மட்டுமே அடையாள அட்டை உள்ளது.

இதை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மரவள்ளி ஸ்டார்ச் இறக்குமதிக்கு தடைவிதிக்க வேண்டும். கள் இறக்க அனுமதிக்க வேண்டும். பதனீர் இறக்க கெடுபிடி செய்யக் கூடாது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி, கீழ்பவானி விவசாயிகள் சங்க நிர்வாகிகள் த.கனகராஜ், இரா.தங்கராசு, கள் இயக்க அமைப்பாளர்கள் இல.கதிரேசன், எம்.சி.ராமசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## பிப்.28-ல் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்

First Published : 26 Feb 2012 12:13:10 PM IST

நாமக்கல், பிப். 25: நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வரும் செவ்வாய்க்கிழமை (பிப்ரவரி 28) நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம் நாமக்கல் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறுகிறது.

ஆட்சியர் ஜெ.குமரகுருபரன் தலைமை வகிக்கிறார். விவசாயிகள் தங்களது விவசாயம் சம்பந்தமான குறைகளை நேரில் தெரிவிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கடலூர் அருகே 5 ஆயிரம் ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு

First Published : 26 Feb 2012 02:36:10 AM IST



பெருமாள் ஏரி பாசனப் பகுதிகளில் நெரடியாக விதைக்கப்பட்ட நெல் பயிர்கள், தற்போது நன்கு செழித்து வளர்ந்து பசுமைக் கம்பளம் போர்த்தியது போன்று காட்சியளிக்கிற

கடலூர், பிப். 25: கடலூர் அருகே 5 ஆயிரம் ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டு உள்ளது.

கடலூர் மாவட்டத்தில் டெல்டா பாசனப் பகுதிகள் 1.50 லட்சம் ஏக்கர் உள்ளிட்ட 2.50 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை பெரும்பாலும் முடிவடைந்து விட்டன.

அதைத் தொடர்ந்து சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் நவரை பட்ட நெல் சாகுபடி தொடங்கபட்டுள்ளது. பெரும்பாலும் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நவரை பட்ட சாகுபடி தொடங்கப்பட்டுள்ளது. பொதுவாக கடலூர் மாவட்டத்தில் குறுவை (ஜூன் முதல் செப்டம்பர் வரை), தாழடி (அக்டோபர் முதல் டிசம்பர் வரை), நவரை (ஜனவரி முதல் மார்ச் வரை) ஆகிய 3 குறுகிய கால நெல் சாகுபடியும், ஆகஸ்ட் முதல் 6 மாதம் நீண்டகால சம்பா நெல் சாகுபடியும் செய்யப்படுகின்றன. சம்பா சாகுபடி செய்வோர் ஏனைய குறுகிய கால நெல் சாகுபடியில் பெரும்பாலும் ஈடுபடுவது இல்லை. சம்பா சாகுபடி செய்ய முடியாமல் போன பகுதிகளில் நவரை பட்ட நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

பெருமாள் ஏரி தண்ணீர், டெல்டா பாசனப் பகுதிகளில் வாய்க்கால்களில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் சிறிதளவு நீர், குறைந்த எண்ணிக்கை ஆழ்குழாய் கிணற்றுப் பாசனம் ஆகியவற்றை கொண்டே நவரை பட்ட சாகுபடி செய்யப்படுகிறது. இந்தாண்டு நவரை பட்ட நெல் சாகுபடி புயல் பாதிப்பு காரணமாக காலதாமதமாக தொடங்கப்பட்டு உள்ளது.

இதில் கடலூரை அடுத்த புதுச்சத்திரம், பெரியப்பட்டு, பரங்கிப்பேட்டை, ஆலப்பாக்கம், பிச்சாவரம், பரங்கிப்பேட்டை பேட்டை பகுதிகளில் சாகுபடி செலவு குறைவு என்பதால், 5 ஆயிரம் ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டு உள்ளது. ஏடிடி 36, ஏடிடி 43, ஏடிடி 45, ஏ.எஸ்.டி. 16, ஏ.எஸ்.டி. 19 ஆகிய குறுகிய கால நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இவைகள் 110 நாள்களில் அறுவடைக்கு தயாராகி விடும்.

பெருமாள் ஏரி பாசனப் பகுதிகளில் நெரடியாக விதைக்கப்பட்ட நெல் பயிர்கள், தற்போது நன்கு செழித்து வளர்ந்து பசுமைக் கம்பளம் போர்த்தியது போன்று காட்சியளிக்கிறது. 30 நாள் பயிராக இவைகள் உள்ளன.

÷நேரடி நெல் விதைப்புக்கு நாற்று நடுதல் செலவு, தண்ணீர் செலவு குறைவு, வேலை ஆள்களும் அதிகம் தேவை இல்லை என்கிறார்கள் விவசாயிகள். ஏரிகள் மற்றும் வாய்க்கால்களில் போதுமான அளவு தண்ணீர் இருப்பதால் இந்தாண்டு நவரை பட்ட சாகுபடி விவசாயிகளுக்கு மிகுந்த நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது

---

தினமலர்
உண்மையின் உரைகல்

# கறிக்கோழி விலை சரிவால் பண்ணையாளர்கள் கவலை

பிப்ரவரி 27,2012,02:38



கோவை:கறிக்கோழி உற்பத்தி, கடந்த ஆண்டைக் காட்டிலும், 30 சதவீதம் அதிகரித்துள்ளது. அதனால், அதன் விலை கடந்த இரு தினங்களில் கிலோவிற்கு, பத்து ரூபாய் வரை குறைந்துள்ளது.தமிழகத்தில், கோவை, பல்லடம், திருப்பூர் ஆகிய இடங்களில் அதிகளவில் கறிக்கோழிப் பண்ணைகள் உள்ளன. இங்கு உற்பத்தியாகும் கறிக்கோழிகள், தமிழகம் முழுவதும் மட்டுமின்றி கேரளா, கர்நாடகா போன்ற வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.கேரள மாநிலத்துக்கு மட்டும், நாள்தோறும், மூன்று லட்சம் கறிக்கோழிகள் விற்பனைக்காக அனுப்பப்பட்டு வருகின்றன. கறிக்கோழியின் தேவை அதிகரிப்பு காரணமாக, அதன் விலையில் ஏற்றம் காணப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் 25ம் தேதி, ஒரு கிலோ கறிக்கோழி விலை 41 ரூபாயாக இருந்தது. இது, நடப்பு பிப்ரவரி 13ம் தேதி, 50 ரூபாயாக உயர்ந்தது.

அதன்பின், 'விறுவிறு' வென உயர்ந்து சென்ற 18ம் தேதி, 56 ரூபாயாக அதிகரித்தது. இந்நிலையில், கறிக்கோழி விலை மீண்டும் இறங்கு முகத்தை தழுவியுள்ளது. 22ம் தேதி ஒரே நாளில் எட்டு ரூபாய் குறைந்து, ஒரு கிலோ கறிக்கோழி, 48 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. அதையடுத்து நேற்று, 46 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இரு தினங்களில், கறிக்கோழி விலை கிலோவுக்கு, 10 ரூபாய் வீதம் சரிந்துள்ளது. கறிக்கோழி விலை விறுவிறுவென ஏற்றம் கண்டு வந்த நிலையில், அதே வேகத்தில் அதன் விலை இறங்கி வருவது கறிக்கோழி உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மத்தியில் கலக்கத்தை

ஏற்படுத்தியுள்ளது.
விலை இறக்கத்துக்கு, கறிக்கோழி உற்பத்தி அதிகரித்திருப்பது தான் காரணம் என்று கூறப்படுகிறது. கறிக்கோழிக்கு நல்ல விலை கிடைப்பதால், அதன் உற்பத்தி உயர்ந்துள்ளது. இது விலைச்சரிவுக்கு வித்திட்டுள்ளது.இதுகுறித்து கறிக்கோழி விற்பனையாளர் ஒருவர் கூறியதாவது:குறிப்பாக, கடந்த ஆண்டைக் காட்டிலும் கறிக்கோழி உற்பத்தி, 30 சதவீதம் உயர்ந்துள்ளது. சராசரியாக, 15 சதவீதம் உயர்ந்தால் மட்டுமே விலை சீராக இருக்கும். கறிக்கோழிக்கு நல்ல விலை கிடைத்ததால், அதன் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.
கடந்த ஆண்டு இதே மாதம் கறிக்கோழி கிலோ, 72 ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டது. ஆனால், உற்பத்தி மிகுதியால், இந்தாண்டு விலை சரிந்துள்ளது. மேலும், கறிக்கோழி கிலோ, 56 ரூபாய் வரை வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்ட போதும் மொத்த விற்பனையில் ஏழு ரூபாய் வரை குறைத்து வழங்கப்பட்டது.
நுகர்வோர் பாதிக்கக் கூடாது என்பதற்காக, கறிக்கோழியின் விலை குறைக்கப்பட்டுள்ளது. உற்பத்தி சீரடைந்தால், கறிக்கோழியின் விலையும் சீரடையும். இவ்வாறு கூறினார்.

## உரத் துறையின் புதிய முதலீட்டுக் கொள்கைக்கு மத்திய அரசு ஒப்புதல்

பிப்ரவரி 27,2012,02:36



புதுடில்லி:உரத் துறையின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய முதலீட்டுக் கொள்கைக்கு, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.உள்நாட்டில், ஆண்டுக்கு, 2.20 கோடி டன் உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் உரத்திற்கான தேவை, 2.90 கோடி டன்னாக உள்ளது. பற்றாக்குறையாக உள்ள 70 லட்சம் டன் உரம், இறக்குமதி மூலம் பூர்த்தி செய்து கொள்ளப்படுகிறது.
நாட்டின் உரத் தேவையை சமாளிக்கவும், உரஉற்பத்தியை அதிகரிக்கவும், கடந்த, 2008ம் ஆண்டு "புதிய முதலீட்டு கொள்கை' அறிவிக்கப்பட்டது. ஆனால், உரத் துறையில் எதிர்பார்த்தபடி, புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்படாததால், இத்திட்டம் தோல்வியடைந்தது.இதையடுத்து, 2010ம் ஆண்டு உர உற்பத்தியை அதிகரிக்க, புதிய கொள்கையை உருவாக்க, மத்திய அரசு முடிவு செய்தது. இதன்படி திட்டக்குழு உறுப்பினர் சவுமித்ரா சட்டர்ஜி தலைமையில், குழு அமைக்கப்பட்டது. இக்குழு, புதிய உரத் தொழிற்சாலைகளுக்கும், உர நிறுவனங்களின்

விரிவாக்கத் திட்டங்களுக்கும், ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அளித்துள்ளது. இதற்கு அர" ஒப்புதல் வழங்கியுள்ளது.

**ஈரோட்டில் ஒருங்கிணைந்த மஞ்சள் வளாகம்அமைக்க விவசாயிகள் வலியுறுத்தல்**

பிப்ரவரி 27,2012,02:33



ஈரோடு:ஒருங்கிணைந்த மஞ்சள் விற்பனை வளாகம் அமைக்க கோரி, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு மஞ்சள் விவசாயிகள் சங்கம் சார்பில், ஈரோடு கலெக்டரிடம் மனு அளித்தது.இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது:ஈரோட்டில், நான்கு இடங்களில் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நான்கு இடங்களிலும் மாதிரிகள் வைக்க போதிய இடவசதி இல்லை. தனித்தனியாக ஏலம் நடப்பதால், விலை மாறுபடுகிறது.

நான்கு இடங்களில் எங்கு கொண்டு சென்றால், கூடுதல் விலை கிடைக்கும் எனத்தெரியாமல், விவசாயிகள் குழப்பம் அடைகின்றனர். மஞ்சளை கொண்டு செல்லும் வாகனங்களால், ஈரோடு நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, ஈரோடு மஞ்சள் விவசாயிகளின், 15 ஆண்டுகள் கோரிக்கையான ஒருங்கிணைந்த மஞ்சள் விற்பனை வளாகத்தை நகருக்கு வெளியே அமைக்க வேண்டும்.

கருமாண்டி செல்லிபாளையத்தில் கட்டப்பட்டுள்ள அரசு கட்டடத்தில் அல்லது வாடகை கட்டிடத்தில் ஒருங்கிணைந்த மஞ்சள் விற்பனை வளாகம் அமைக்க வேண்டும். அரசால் ஒருங்கிணைந்த மஞ்சள் விற்பனை வளாகம் அமைக்க இடம் ஏற்பாடு செய்ய இயலாது என்றால், இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் சார்பில், வாடகைக்கு இடம் ஏற்பாடு செய்து தரப்படும். ஒருங்கிணைந்த மஞ்சள் விற்பனை வளாகம் அமைக்க மாவட்ட நிர்வாகத்துக்கு அனைத்து வகையிலும் இணைந்து செயல்படவும் உதவவும் தயார்.

மஞ்சள் விற்பனையில் விலை, எடை, பணப்பட்டுவாடா, சரக்கு ஒப்படைப்பு சீட்டு வழங்குதல், கமிஷன், வட்டி போன்றவற்றில் முறைகேடு நடக்கிறது. பெரிய அளவில் வரி ஏய்ப்பு நடப்பதால்,

அரசுக்கும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## திருமண சீசன் துவக்கம்: தக்காளிக்கு மவுசு அதிகரிப்பு

பிப்ரவரி 27,2012,02:32



சேலம்:தமிழகத்தில், திருமண சீசன் துவங்கி உள்ள நிலையில், தக்காளி பழத்துக்கு மவுசு அதிகரித்துள்ளது. இதனால், தக்காளி விலை திடீரென உயர்ந்துள்ளது.சேலத்துக்கு, தர்மபுரி மாவட்டம் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, காவேரிப்பட்டினம் ஆகிய இடங்களில் இருந்து தினசரி, 10 வேன்களில் தக்காளி பழம் விற்பனைக்கு வந்து கொண்டு இருந்தது.

சேலம் மாவட்டத்தின் வாழப்பாடி, ஓமலூர், பனமரத்துப்பட்டி, அயோத்தியாபட்டணம், மல்லூர், மேச்சேரி, மேட்டூர், ஆத்தூர், தலைவாசல் பகுதிகளில் இருந்து தினசரி பஸ்கள், வேன்களில் சேலத்திற்கு விற்பனைக்கு வருகிறது.

இந்நிலையில், தமிழகத்தில் தற்போது திருமண சீசன் காரணமாக, தக்காளி பழத்தின் தேவை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் வெயிலின் தாக்கம் அதிகரிப்பால், தக்காளி பழங்களில் வெம்பல் நோயின் தாக்கமும் அதிகரித்துள்ளது. மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் தக்காளி பழத்தின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் இருந்து தினசரி, 10 வேன்களில் வந்து கொண்டு இருந்த தக்காளி பழத்தின் அளவு தற்போது பாதியாக குறைந்து நான்கு வேன்களில் மட்டுமே வருகிறது.

இதே போன்று சேலம் மாவட்டத்தின், புறநகர் பகுதிகளில் வந்து கொண்டு இருந்த தக்காளி பழத்தின் வரத்தும் பாதியாக குறைந்து விட்டது. இதனால், கடந்த வாரம் வ.உ.சி., மார்க்கெட், பால்மார்க்கெட், காய்கறி மார்க்கெட், தள்ளுவண்டியில் கிலோ, 12 ரூபாய் முதல், 16 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

தக்காளி பழத்தின் வரத்து குறைந்ததால், அதன் விலை, கிலோ 20 ரூபாய் முதல் 24 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.இதே போன்று சேலத்தில் உள்ள உழவர் சந்தைகளில் கிலோ, 10 ரூபாய்க்கு விற்ற

தக்காளி பழம், கிலோ, 15 ரூபாய் முதல், 17 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.தக்காளி பழத்தின் சீசன் முடிவுக்கு வரவுள்ளதால் தர்மபுரி மாவட்டம், சேலத்தின் புறநகரில் இருந்து விற்பனைக்கு வரும் தக்காளி பழத்தின் அளவு மேலும் குறையும் என தெரிகிறது. இதனால் தக்காளி பழத்தின் விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே இருக்கும் என்று வியாபாரிகள் தெரித்துள்ளனர்.

இது குறித்து பால்மார்க்கெட் தக்காளி பழ வியாபாரி சீனிவாசன் கூறியதாவது:

தக்காளி பழத்தின் சீசன் முடிவுக்கு வரும் நிலையில் உள்ளது. இதனால், சேலத்திற்கு வெளியூர்களில் இருந்து வரும் நாட்டு தக்காளி பழத்தின் வரத்து பாதியாக குறைந்து விட்டது. இன்னும் சில தினங்களில் தக்காளி பழத்தின் வரத்து மேலும் குறையும். இதனால், தக்காளி பழத்தின் விலையில் மேலும் உயர்வு ஏற்படும்.

நாட்டு தக்காளி பழத்தின் வரத்து குறைந்துள்ள நிலையில், பெங்களூர் தக்காளி பழத்திற்கு மவுசு அதிகரித்துள்ளது. இதனால், பெங்களூர் மற்றும் ஒசூர் பகுதியில் இருந்து சேலத்திற்கு வரும், பெங்களூர் தக்காளி பழத்தின் வரத்து இன்னும் சில தினங்களில் அதிகரிக்கும். இவ்வாறு சீனிவாசன் கூறினார்.

**அதிக உற்பத்தி மற்றும் இறக்குமதியால் பருத்தி விலை குவிண்டாலுக்கு ரூ.500 சரிவு**

பிப்ரவரி 27,2012,02:31



உள்நாட்டில் பருத்தி உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், பாகிஸ்தான் மற்றும் கம்போடியாவில் இருந்து பருத்தி இறக்குமதி செய்யப்படுவதால் அதன் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தாராளமாக அனுமதி வழங்கியதால், மொத்த வியாபாரிகள் பருத்தியை பதுக்கினர்; இதனால் பருத்திக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. நூலிழை விலை தாறுமாறாக உயர்ந்தது. அதற்கேற்ப, ஜவுளி விலையை உயர்த்த முடியாமல், ஜவுளி உற்பத்தியாளர்கள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர். தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டது.

மத்திய அரசு, பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதித்து, நூற்பாலைகளுக்கு தேவையான பருத்தியை

இருப்பில் வைக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பருத்தியை மட்டுமே ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என ஜவுளி உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.இதையடுத்து, நடப்பாண்டு, 345 லட்சம் பருத்தி பொதிகள் உற்பத்தி செய்யப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதில், 80 லட்சம் பருத்தி பொதிகளை மட்டும் ஏற்றுமதி செய்யலாம் எனவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாடு முழுவதும் பருத்தி அறுவடை துவங்கி உள்ளது. ஈரோடு மாவட்டம் கோபி சுற்று வட்டாரத்தில் சிறுவலூர், பதிபாளையம், கூகலூர், பங்களாபுதூர், காசிபாளையம், கவுந்தபாடி உள்ளிட்ட பகுதிகளில், 1,000 ஏக்கருக்கும் மேல் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பருத்தி விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் கூட்டமைப்பு சங்க தலைவர் சிவநேசன் கூறுகையில், "மத்திய அரசு நிர்ணயித்துள்ள இலக்கின்படி, பருத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதே சமயம், பாகிஸ்தான், கம்போடியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து பருத்தி இறக்குமதி செய்வது அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பருத்தி விலை குறைந்துள்ளது. ஒரு பொதி பருத்தி, 32 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது,' என்றார்.

கோபியை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில்," நடப்பாண்டு பருத்தி விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது. சென்ற வாரம் ஒரு குவிண்டால், 4,000 ரூபாய்க்கு விற்கப்பட்டது, நடப்பு வாரம், 3,500 ரூபாயாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரே வாரத்தில் பருத்தி விலை, 500 ரூபாய் வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது' என்றனர்.-நமது சிறப்பு நிருபர்-

**மரவள்ளிக் கிழங்கு விவசாயிகளுக்கு ரூ.1 லட்சம் கோடி நஷ்டம்?**

பிப்ரவரி 27,2012,02:30



சேலம்:மரவள்ளி கிழங்கு, உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளதையடுத்து, அதன் விலை சரிவடைந்துள்ளது. இதனால், 1 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்படும் என தமிழ்நாடு மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் மதிப்பிட்டுள்ளது.தமிழகத்தில், 15 மாவட்டங்களில்

மரவள்ளி கிழங்கு பயிரிடப்படுகிறது. பிற மாவட்டங்களை விட சேலம், நாமக்கல் மாவட்டங்களில் மரவள்ளி விவசாயிகள் அதிகளவு உள்ளனர். சேலம் மாவட்டத்தில் மட்டும், 400க்கும் அதிகமான மரவள்ளி கிழங்கு ஆலைகள் செயல்படுகின்றன. மரவள்ளி கிழங்கு கடந்தாண்டுகளில் மூட்டை 350 முதல் 450 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

ஆலை அதிபர்கள், கிழங்குகளை குறைந்த விலைக்கு வாங்கி, அரவையின் போது ரசாயன பொருட்களை கலந்து, தரத்தை குறைத்ததால், மரவள்ளிக் கிழங்கு மாவுக்கு வடமாநிலங்களில் வரவேற்பு குறைந்தது.இதனால், ஆலை அதிபர்கள் மரவள்ளி உற்பத்தியாளர்களிடம் இருந்து மூட்டைக்கு, 110 ரூபாய் கொடுத்து கிழங்குகளை வாங்கி, மாவாக அரைத்து, குடோன்களில் இருப்பு வைத்துள்ளனர். தற்போது, மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் பெரும் நஷ்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். மரவள்ளி கிழங்கு டன்னுக்கு, 5,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என விவசாயிகள், மாவட்ட ஆட்சியரிடம் எடுத்துரைத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால், தமிழ்நாடு மரவள்ளி கிழங்கு உற்பத்தியாளர் சங்கம் சார்பில், மரவள்ளி கிழங்கு விலையை நிர்ணயம் செய்யக் கோரி, தமிழக முதல்வருக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டது.அந்த மனுவில், தமிழகத்தில், 60 லட்சம் ஏக்கரில் மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. 73 கிலோ எடை கொண்ட மரவள்ளி மூட்டை, 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, 150 மூட்டை வரை கிடைத்தாலும், விலை குறைவாக இருப்பதால், விவசாயிகளுக்கு, 19 ஆயிரத்து, 500 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

60 லட்சம் ஏக்கரில் அறுவடையாகும் கிழங்குக்கு மொத்தம், ஒரு லட்சத்து, 17 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

எனவே, டன்னுக்கு, 5,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மரவள்ளி உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து, ஜூன் முதல் வாரத்தில் முதல்வர் தலைமையில் முத்தரப்பு கூட்டம் நடத்தி, மரவள்ளி கிழங்குக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மலர் செடிகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 27,2012,00:00 IST

கருத்தை பதிவு செய்ய

செங்கல்பட்டு :ஆத்தூர் தோட்டக்கலைப் பண்ணையில், பழச்செடிகள் மற்றும் மலர் செடிகள், விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன.

செங்கல்பட்டிலிருந்து, 5 கி.மீ., தொலைவில் உள்ள ஆத்தூர் கிராமத்தில், அரசு தோட்டகலைப் பண்ணை அமைந்துள்ளது. இங்கு பழச்செடிகள், மலர் செடிகள் மற்றும் அலங்கார செடிகள்

உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது கொய்யா, கருவேப்பிலை, மல்லி, ரோஜா, கனகாம்பரம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன.

இது குறித்து, பண்ணை மேலாளர் மாயன் கூறும்போது, ""தற்போது, 15 ஆயிரம் கொய்யா செடிகள், 40 ஆயிரம் கருவேப்பிலை செடிகள், 20 ஆயிரம் கனகாம்பரம் செடிகள், 30 ஆயிரம் மல்லி செடிகள், 8 ஆயிரம் ரோஜா செடிகள், விற்பனைக்கு உள்ளன. இவை, மானியத்தில் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டருக்கு, அதிகபட்சமாக 7,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மானியத்தில் செடி வாங்க விரும்புவோர், தங்களுடைய சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு நகல், புகைப்படம், ஆகியவற்றை தோட்டக் கலை அலுவலரிடம் கொடுத்து, மானிய விலையில் செடிகளை வாங்கிச் செல்லலாம். செடிகள் வளர்ப்பது தொடர்பாக, தொழில்நுட்ப ஆலோனைகளும் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு, 98424 92129 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

**நாட்டுக்கோழி வளர்ப்பில் அதிக ஆர்வம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 27,2012,01:52 IST

பனமரத்துப்பட்டி: சிறிய இடத்தில், குறைவான முதலீட்டில் நாட்டுக்கோழிகள் வளர்ப்பதால், குறுகிய காலத்தில் கணிசமான வருவாய் கிடைக்கிறது.

நாட்டுக்கோழி வளர்ப்பு, கிராம பகுதி மக்களின் திடீர் பணத்தேவைகளை பூர்த்தி செய்யும் ஆதாரமாகவும், நிலையான வருவாய் தரக்கூடியதாவும், நிதி நெருக்கடி காலங்களில் கைகொடுக்கும் நண்பனாகவும் உள்ளது. கிராம மக்களின் நடமாடும் வங்கி நாட்டுக்கோழிகள் என, அழைக்கப்படுகிறது.

ஆரம்பத்தில், வீட்டு புறக்கடையில் ஒருசில கோழிகளை மட்டுமே வளர்த்து, தங்களின் குடும்ப தேவைகளுக்கு பயன்படுத்தி வந்தனர். உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் கொழுப்பு சத்து குறைவாகவும், புரத சத்து நிறைந்த நாட்டுக்கோழி இறைச்சி, முட்டைகளை, பொதுமக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர்.

நாட்டுக்கோழி இறைச்சி தேவைகள் அதிகரித்து வருவதால், நாட்டுக்கோழி வளர்ப்பில், கிராம மக்கள் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். பனமரத்துப்பட்டி, களரம்பட்டி, மல்லூர், பூமலை கரடு, நத்தமேடு, அடிக்கரை, நல்லியாம்புதூர் உள்ளிட்ட கிராமங்களில், சிறிய முதலீட்டில் திறந்த வெளி தடுப்புகள் அமைத்து, நாட்டுக்கோழிகள் வளர்க்கப்படுகிறது.

இதுகுறித்து, நாட்டுக்கோழி வளர்க்கும் விவசாயி யுவராஜ் கூறியதாவது:

நாட்டுக்கோழி குஞ்சுகள், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட இடங்களில் கிடைக்கிறது. 500 சதுரடி

நிலத்தில் சுற்றியும் தடுப்புகள் அமைத்து, அதில், 500 நாட்டுக்கோழி குஞ்சுகள் வளர்த்து வருகிறேன். நான்கு மாதத்தில், இரண்டு கிலோ எடைக்கு மேல் கோழிகள் வளர்ந்து விடுகிறது. ஒரு கோழிக்கு, தலா, 90 ரூபாய் வரை பராமரிப்பு செலவாகிறது. உயிருடன் ஒரு கிலோ, 140 ரூபாய்க்கு விற்பதால், கணிசமான வருவாய் கிடைக்கிறது.

சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம், கால்நடை உதவி பேராசிரியர் சித்ரா ஆகியோர் கூறியதாவது:

இந்தியாவில், மொத்தம், 18 வகையான நாட்டுக்கோழிகள் உள்ளன. தமிழ்நாட்டில், அசீல்அல்லது சண்டைக்கோழி, கடக்நாத் என்னும் கருங்கால் கோழி, கழுகுக் கோழி அல்லது கிராப்புக்கோழி, குருவுக்கோழி, கொண்டைக்கோழி, குட்டைக்கால் கோழி, பெருவிடைக் கோழி ஆகிய ஏழு வகையான கோழிகள் வளர்க்கப்படுகிறது.

கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளரும் குழந்தைகள் ஆகியோர் நாட்டுக்கோழி இறைச்சி, முட்டை மூலம் புரதச்சத்து பற்றாக்குறையை ஈடுகட்ட முடியும். மகளிர், நாட்டுக்கோழி வளர்ப்பதால், தங்கள் குடும்பத்தின் புரதச்சத்து தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதோடு, கணிசமான வருவாயையும் ஈட்டிக் கொள்ளலாம்.

பத்து பெட்டை கோழி, இரண்டு சேவல் வளர்ப்பதால், ஆண்டுக்கு, 800 முட்டைகள் இடும். இதில், 50 சதம் தரமான முட்டைகள் அவயத்தில் வைப்பதால், 80 சதம் குஞ்சுகள் கிடைக்கும். ஆறு மாதத்துக்கு பின், ஒன்றரை கிலோ எடையில், 300 கோழிகள் கிலோ, 150 ரூபாய் வீதம், 90 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யலாம்.

தீவன பராமரிப்பு செலவு, 20 ஆயிரம் ரூபாய் போக, ஆண்டுக்கு, 70 ஆயிரம் ரூபாய் நிகர லாபம் கிடைக்கும். கிராம மகளிர், நாட்டுக்கோழி வளர்த்து லாபம் பெறலாம்.

## கோபி வட்டாரத்தில் புகையிலை அறுவடை தீவிரம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 27,2012,01:57 IST

கோபிசெட்டிபாளையம் : கோபி சுற்று வட்டாரத்தில் புகையிலை அறுவடைப் பணி மும்முரமாக நடக்கிறது.

கோபி, பங்களாபுதூர், டி.என்.பாளையம், வாணிப்புத்தூர், கடத்தூர், கெட்டிசேவியூர், குருமந்தூர், சிறுவலூர், கள்ளிப்பட்டி, நம்பியூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் புகையிலை பயிரிடப்படுகிறது. கொளப்பலூர், நம்பியூர் பகுதியில் மட்டும் 6,000 ஏக்கரில் புகையிலை பயிரிடப்படுகிறது. 100 முதல் 110 நாள் பயிரான புகையிலை நன்கு விளைந்துள்ளதால், அறுவடை மும்முரமாக நடக்கிறது. அறுவடை செய்யப்படும் புகையிலையை, 30 நாட்கள் வரை காய வைத்து, கருப்பட்டி வெல்லம் நீரில் ஊற வைத்து, பதப்படுத்தப்படுகிறது.

கோபி மற்றும் நம்பியூர் பகுதியில் விளையும் புகையிலை காரம் மற்றும் நல்ல நறுமணமும் உள்ளதால், வெளிமாநிலங்களில் நல்ல வரவேற்பு உள்ளது. கோபி சுற்று வட்டாரத்தில் உற்பத்தியாகும் புகையிலை மஹாராஷ்டிரா, மேற்கு வங்கம், டில்லி, மத்திய பிரதேசம் உள்ளிட்ட பல வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், 100 டன் புகையிலை வெளிமாநிலங்களுக்கு இங்கிருந்து ஏற்றுமதியாகிறது.

புகையிலை விவசாயிகள் கூறியதாவது:

கோபி சுற்று வட்டாரத்தில் ஏராளமான விவசாயிகள் புகையிலை சாகுபடி செய்கின்றனர். புகையிலை பயிரிடும்போது கோழி கழிவு, யூரியா, உப்பு போன்றவை உரமாக பயன்படுத்தப்படுகிறது. யூரியா விலை உயர்வால் சாகுபடி செலவு உயர்ந்துள்ளது. ஒரு ஏக்கரில் புகையிலை சாகுபடி செய்ய, 30 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. புகையிலை ஒரு முறை பயிரிட்டால், கரும்பு போல், அடுத்த முறையும் அறுவடை செய்து கொள்ளலாம். புகையிலை நல்ல முற்றிய நிலை வந்தால், அதில் இருந்தே விதை எடுத்து கொள்ளலாம். வெளியில் இருந்து விதை வாங்க வேண்டியதில்லை. சாகுபடிச் செலவு, பராமரிப்பு செலவுதான் அதிகம். நன்கு வளர்ந்துள்ள புகையிலை செடிகளை அறுவடை செய்து, மூங்கில் மரத்தில் தொங்க விட வேண்டும். 25 முதல் 30 நாட்கள் நன்கு காய்ந்த பின், கருப்பட்டி வெல்ல நீரில் ஊற வைத்து பதப்படுத்தி வைக்க வேண்டும். நல்ல விலைக்கு வரும் போது விற்று விடலாம். புகையிலை சாகுபடி செய்தால் பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**ஆடுகளின் நீலநாக்கு நோய்க்கு தடுப்பூசி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 26,2012,22:38 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : நீல நாக்கு நோய்க்கு தடுப்பூசி போட, கால்நடை மருத்துவரையோ அல்லது அருகிலுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை மையத் தலைவரையோ அணுகலாம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை, விரிவாக்க கல்வி இயக்குனர் கதிரேசன் அறிக்கை:

ஆடுகளை தாக்கும் மிக முக்கிய நோய் நீலநாக்கு நோய். தென்மேற்கு பருவமழை முடிந்ததும் இது ஆடுகளை தாக்கும். இதனால் இறக்கும் ஆடுகளின் நாக்கு நீலநிறமாக மாறிவிடும்."கியூளிகாய்டெஸ்' எனும் சிறிய கொசு போன்ற பூச்சிக்கடியால் ஆடுகளுக்கு பரவுகிறது.

பூச்சிகள் மழைக்காலத்தில் எளிதாக இனப்பெருக்கும் செய்வதால், இந்நோய் எளிதில் பரவுகிறது.

இந்நோய் ஆடு, மாடுகளை தாக்கினாலும், ஆடுகளில் குறிப்பாக செம்மறியாடுகளை தான் தாக்குகிறது. கியூளிகாய்டெஸ் கொசு போன்ற பூச்சிகள் கடிக்கும் போது, நோயுள்ள ஆட்டிலிருந்து மற்ற ஆடுகளுக்கு பரவுகிறது.

அதிக காய்ச்சல், மூக்கில் ரத்தத்துடன் சளி, வாய், உதடுகள், ஈறுகள், நாக்கு ஆகிய இடங்களில் வீக்கத்துடன் புண், சில சமயங்களில் நாக்கு தடித்து நீல நிறமாக இருக்கும், கால் குளம்புகளும், தோலும் சேருமிடத்தில் வீக்கத்துடன் நொண்டி நடப்பது, கழுத்து ஒரு பக்கம் சாய்ந்து காணப்படுவது நோயின் அறிகுறிகள்.

நோயுள்ள ஆட்டை தனியாக பிரித்து தகுந்த சிகிச்சை அளிப்பது அவசியம். அரிசி, கம்பு, கேழ்வரகு ஆகியவற்றில் கஞ்சி காய்ச்சி கொடுக்கலாம். வெயிலில் மேய்ச்சல் ஆகாது. ஆடு அடைக்கும் இடத்தையொட்டி நீர் தேங்கி இருக்க கூடாது. இரவு நேரத்தில் வேப்பம் புண்ணாக்கு புகை போடலாம். ஈ, கொசு போன்றவற்றை அழிக்கும் பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் ஒட்டுண்ணி நீக்கி, மருந்துகள் அடித்தால் நோய் பரவுதலை தடுக்கலாம். இந்நோய்க்கு தற்போது பல்கலையால் தடுப்பூசி உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை மழைகாலத்துக்கு முன், இத்தடுப்பூசியை செம்மறியாடுகளுக்கு போட வேண்டும். தடுப்பூசி போட கால்நடை மருத்துவரையோ அல்லது அருகிலுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை மையத்தின் தலைவரையோ அணுகவும்.இவ்வாறு, அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் பெயர் பதிவு வேளாண்துறை அழைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 26,2012,22:38 IST

சூலூர் : "சிறு, குறு விவசாயிகள் வேளாண் அலுவலகத்தில் பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்' என வேளாண்துறை தெரிவித்துள்ளது.

தமிழக அரசு சிறு, குறு விவசாயிகள் கணக்கெடுப்பு நடத்த உத்தரவிட்டுள்ளது. சூலூர் வட்டாரத்தில் வேளாண்துறை மற்றும் "அட்மா'வுடன் தமிழ்நாடு வேளாண் பல்கலை இணைந்து கணக்கெடுப்பு முகாம் நடத்தியது. கணக்கெடுப்பை ஒன்றியகுழு தலைவர் பாலு கொடியசைத்து துவக்கி வைத்தார். வேளாண் பல்கலை முதல்வர் ராஜராஜன், வேளாண் இணை இயக்குனர் சக்திவேல் பேசினர்.

கணக்கெடுப்பில், வேளாண் பல்கலையின் 150க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் பங்கேற்று, சூலூர் வட்டாரத்தில், காடாம்பாடி, செங்கத்துறை, காங்கேயம் பாளை
யம், மாதப்பூர் உள்ளிட்ட 30 கிராமங்களில் 2,000க்கும் மேற்பட்ட விவசாயிகளிடம் விபரங்களும், ஆவணங்களும் பெற்று, மண் மாதிரி

எடுத்தனர்.

வேளாண்துறை அதிகாரிகள் கூறுகையில்,"அரசின் நலத்திட்டங்கள் முறையாக அனைத்து விவசாயிகளுக்கும் சென்று சேர, இந்த கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கணக்கெடுப்பின்போது பெயர் பதிவு செய்யாத விவசாயிகள், அலுவலக வேலைநாட்களில், மண் மாதிரி, இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, சிட்டா, அடங்கல் ஆகியவற்றுடன் மண் பரிசோதனைக்காக ரூ. 20ம் சேர்த்து பெயர் பதிவு செய்து கொள்ளலாம்' என்றனர்.

---